இரணியல் கலைத்தோழனின் வஞ்சகவலை நாடகம் உணர்த்தும் சமுதாயச் சிக்கல்கள்

முனைவர். மோ. மோஷா லீனு
உதவிப் பேராசிரியர்
அருணாச்சலா கலை மற்றும் அறிவியல் (பெண்கள்) கல்லூரி, வெள்ளிச்சந்தை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முன்னுரை

தமிழ் இலக்கியம் இயல், இசை, நாடகம் என்னும் கூறுகளை உள்ளடக்கியது. பொழுது போக்கிற்காகவும், மேடைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தவும், மக்களுக்கு அறிவுரைகளை வழங்கவும் நாடகம் பயன்படுகிறது. தமிழ் நாடகக் கூறுகளை இணைத்து வீரமாமுனிவர் காலத்தில் இயேசு நாதரின் பிறப்பு பற்றிய நாடகம் உருவானது. தொடர்ந்து விவிலியக் கதைகள் நாடகங்களாக உருப்பெற்றன. இவ்வாறு கிறித்தவ நாடகங்கள் வளர்ச்சிப் பெற்றன. இரணியல் கலைத்தோழனின் வஞ்சகவலை என்னும் கிறித்தவ நாடகத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

நாடகம் தோற்றம்

மனிதன் தான் அனுபவித்த செயல்களை விளையாட்டு உணர்வுடன் நடித்து காட்டிய போது நாடகம் தோற்றம் பெற்றது. "நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த தெருக்கூத்தைத் தமிழ் நாடகமாக்கிப் பாமர மக்களும் பார்த்து ரசித்து, நாடகக் கலையின் பெருமையை உணரவேண்டும்என்றகருத்துடன்நாடகத்தை எழுதியதோடு மட்டுமல்லாமல் அறிவுரைகளையும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றனர்" என்பார் எம். இராமசாமி (1999:38). சங்க காலத்தில் சமயச் சடங்குகளாகத் தொடங்கிய கூத்து நாளடைவில் கலையாக மாறியுள்ளது. "நாடகத்திலேயே முத்தமிழையும் ஒருங்கே காணலாம்" என்று மா. ராசமாணிக்கம் (2006: 6) கூறுகிறார். நாடகத்தைச் சமுதாய நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், சமய நாடகங்கள், அரசியல் நாடகங்கள் என்று பல வகைப்படுத்துவர். சமய நாடகத்தில் கிறித்தவ நாடகம் முக்கியப் பங்காற்றுகின்றது.

கிறித்தவ நாடகங்கள்

கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காகக் கிறித்தவ நெறிகளை நாடகமாக நடித்துக் காட்டினர். அச்சிலேறாத இந்நாடகங்கள் காலத்தால் அழிந்து கொண்டிருக்கின்றன. தற்போதும் பல நாடகங்கள் எழுதி அரங்கேற்றம் செய்யப்படுகின்றன. அவைகளை அழியாமல் பாதுகாப்பது ஒவ்வொரு ஆய்வாளரின் கடமையாகும். விவிலியத்தின் பல்வேறு நிகழ்ச்சிகள், திருமறையில் வரும் மாந்தர்கள் மற்றும் கதைகள், புனிதர்களின் வாழ்வு, தியாகம் என்பவற்றை எடுத்தியம்பும் நாடகங்கள் எழுதி நடிக்கப்பட்டன. இந்நாடகங்களை மக்கள் விரும்பிப் பார்த்தனர். "அடிகளார் காலத்தில் இயேசு கிறிஸ்துவின் வரலாற்று நிகழ்ச்சிகளைப் புதிய கிறித்தவர்களுக்குச் சொற்பொழிவாக விளக்கி உரைப்பது பாதிரிமார்களுக்கு அரியச் செயலாக இருந்தது. எனவே அடிகளார் அவற்றை நாடகங்களாக்கி மக்கள் காணுமாறு செய்தார்" என்பார் பெ.கோவிந்தசாமி (1992:14). இன்றைய கால சுழலிலும் கோவில்களில் கிறித்தவ நாடகங்கள் எழுதி அரங்கேற்றப் படுகின்றன. இரணியல் கலைத்தோழனின் வாழ்க்கை வரலாறு

குமரி மாவட்டம் இரணியல் என்ற ஊரின் அருகில் உள்ள மாங்குழி என்ற சிற்றூரில்

சா. ஆசீர்வாதம், சாரால் ஆகியோரின் புதல்வராக 03-09-1930-இல் கலைத்தோழன் பிறந்தார். இவரது இயற்பெயர் சாமுவேல். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள் ஆகியவற்றைப் படைத்து இலக்கியப் பணியையும் செய்தவர். எழுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடைகளில் அரங்கேற்றி உள்ளார். நடிக்கப்பட்ட இடங்களில் அவர் எழுத்துப் பணியைப் பாராட்டி நாடக சாகரம், நாடகக் கலைமாமணி, நாடகக் கலைவேந்தன், நாஞ்சில் நாடகக் கலைச்சுடர் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. பல விருதுகளையும், பரிசுகளையும் பெற்றவர். இவரது நாடகங்களில் சமூகத்தில் மக்களிடையே காணப்படும் போட்டி, பொறாமை, சதித்திட்டம் போன்றவற்றை வெளிச்சமிட்டுள்ளார். 04-09-2021-இல் இயற்கை எய்தினார்.

கதைச் சுருக்கம்

ஷீபா நாட்டு அமைச்சர் எமோரியனைச்இ சந்திக்க அதெனியா என்னும் நண்பன் வருகிறான். இருவரும் மக்லோன் என்னும் பேர் கொண்ட அந்நாட்டு மன்னனை ஆட்சியிலிருந்து மாற்ற சுழ்ச்சி செய்கிறார்கள். எஸ்ரோன் என்னும் தளபதி மன்னனின் பக்கமாக இருந்தான். அரசனை ஆட்சியிலிருந்து கவிழ்க்க அண்டை நாடான காபா நாட்டின் மன்னன் அலெக்சாண்டரின் உதவியை நாடுகிறார்கள். அலெக்சாண்டரின் மகள் ஜாக்குலின் அரண்மனையை விட்டு ஒரு தாத்தாவின் வீட்டில் வசித்து வருகிறாள். மலைவளத்தைப் பார்க்க வந்த ஜாக்குலினும், எஸ்ரோனும் சந்திக்கின்றனர். இருவரும் பல நாட்கள் சந்தித்து தாங்கள் யார் என்று கூறாமல் நேசிக்கின்றனர். அலெக்சாண்டர் கிறித்தவர்களைக் கொடுமைப்படுத்தி சுழ்ச்சி செய்து மதக்கலவரத்தைத் தூண்டி விடுகிறான்.

நாட்டில் கிறித்தவ மதத்தைப் பரப்பினான் என்று சொல்லி எஸ்ரோனைச் சிறையில் அடைக்க எமோரியன் சுழ்ச்சி வகை தேட, மன்னன் அதை பொருட்படுத்தவே இல்லை. அலெக்சாண்டரை அதெனியா சந்திக்க வந்தான். அவர்கள் மதக்கலவரத்தைத் தூண்டி விட்டு, மக்லோனை வீழ்த்த சுழ்ச்சி செய்தனர். அலெக்சாண்டர் தாம் அரசனாக எண்ணியிருந்தான். தளபதியில்லாத நேரத்தில் மக்லோனைச் சிறைபிடித்து அலெக்சாண்டர் ஆட்சி செய்தான். அலெக்சாண்டரின் உண்மையை அறிந்த எமோரியன், தன் நாட்டு மக்களின் கலவரத்தை அடக்கி தனது மன்னனின் ஆட்சிக்கு உதவினான்.

நாடகம் காட்டும் சமுதாயம்

சமுதாயத்தில் காணப்படுகிற மக்களின் ஆணவம், போட்டி, பொறாமை, சுழ்ச்சி, வஞ்சனை, தந்திரங்கள் போன்றவற்றை கலைத்தோழன் 'சுவஞ்சக வலைசுசு எனும் நாடகத்தில் சித்தரித்துள்ளார்.

பதவி ஆசை

சமுதாயத்தில் மக்களுக்குப் பதவி ஆசை அதிகமாகக் காணப்படுகிறது. அதனால் என்னென்ன விளைவுகள் மக்களை ஆட்கொள்கிறது என்பதைப் பற்றி கவலை கொள்வதில்லை. சமுதாயத்தின் நிலைமையை ஆசிரியர் நாடகத்திலும் சுட்டிக் காட்டுகிறார். எமோரியனை அரசனாக்க அதெனியா தந்திரங்களைக் கையாள்கிறான். ''உயர் பதவியைப் பெற்றவர்களெல்லாம் தந்திரசாலிகள். தாங்களும் தந்திரத்தைக் கையாண்டு மந்திரி பதவியை விட்டு விலகி மன்னன் பதவியைப் பெற வேண்டும்'' என்று அதெனியா எமோரியனிடம் கூறுவதாக அமைந்துள்ளது. பதவி உயர்வை நல்ல முறையில் பயன்படுத்துவதே முதன்மையானது என்ற கூற்றை உரைக்கிறார்.

ஒற்றுமையைக் குலைக்கின்ற பாங்கு

ஒற்றுமையைக் குலைக்கின்ற பாங்கு சில மக்களிடம் காணப்படுகிறது. ஒற்றுமையாக இருக்கும் மக்களிடம் அவர்கள் சென்று

ஏதாவது சொல்லி அவர்களின் மனநிலையை மாற்றுகிறார்கள். இதனால் பகைமை உணர்வு மக்களிடையே தோன்றுகிறது. ஒன்றாக இருக்கும் இருவரைப் பிரித்துவிட்டால் காரியம் சுலபமாக முடியும். "மன்னனையும்-தளபதியையும் மோத விடுவது, பகைவர்களாக்குவது" என்ற அதெனியாவின் கூற்றின் மூலம் உணர முடிகிறது.

கேலி செய்யும் பண்பு

சமுதாயத்தில் பிறர் மனம் துன்பப்படும் என்று கூட கருதாமல் கேலி செய்யும் பாங்கு அனேகரிடத்தில் காணப்படுகிறது. ஊனமுற்றவர்களை எவ்வாறு கேலி செய்கிறார்கள் என்பதைச் சித்தரிக்கிறார் ஆசிரியர். "போயும் போயும் ஒண்ணரைக் காலையா கட்டிக்கிட்டே" என்று மார்லூசு கார்லூசிடம் கேட்பதாக அமைகிறது. இதன் மூலம் சில்காள் ஊனமுற்றவள் என்பதை உணர முடிகிறது. கண்ணைக் குறிப்பிடும் போது, "காலைப் போல ஒண்ணரையா?" என்று மார்லூசு கேட்கிறான். கேலி செய்வதை ஆசிரியர் கடுமையாகக் கண்டிக்கிறார்.

பொறுப்பற்ற அதிகாரிகள்

பொறுப்பற்ற அதிகாரிகள் நாட்டினை ஆட்சி செய்தாலும் அந்த நாடு சீரழிந்து விடும். மக்களின் தேவைகளைச் சிந்திக்காமல் அவர்கள் மனம்போன போக்கில் ஆட்சி செய்வதால் பலவித இன்னல்கள் வந்து நாட்டினைப் பாதிக்கிறது. "தன்னலத்தையே பெரிதாக நினைக்கும் அவன் குடிமக்கள் நலத்தை மறந்தான்" என்ற கூற்றிலிருந்து அலெக்சாண்டர் நாட்டினை எவ்வாறு ஆட்சி செய்தான் என்பதை அறியமுடிகிறது. "மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாதவன் மதத்தின் பெயரால் மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறான்" என்ற கூற்றின் மூலம் பொறுப்பற்ற அதிகாரிகளின் செயலால் மக்கள் படுகின்ற இன்னல்களை அறிய முடிகிறது.

இறைபக்திக்கு முரணானவை

சமுதாயத்தில் சில மக்கள் அதிக இறைப்பக்தி கொண்டவர்களைப் போல காட்சி அளிப்பார்கள். ஆனால் அவர்கள் செய்கின்ற செயல்களை உற்றுப் பார்க்கும் போது, இன்னல் நிறைந்த செயல்களாகக் காணப்படுகிறது. "ஆண்டவரைப் பத்தி முச்சு விடாம பேசுறவனே அயோக்கியத்தனம் பண்ணுறான். ஆண்டவன் பெயரைச் சொல்லி செய்யாததெல்லாம் செய்யிறான். அப்புறமெங்கே கிறித்தவம் வளரும்" என்றும் "வெள்ளையடித்த கல்லறைகளாகக் காணப்படுகிறார்கள்" என்றும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். மனிதன் கடவுளின் கண்களை ஏமாற்றவே முடியாது என்று மக்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

ஏழை-பணக்காரர் பாகுபாடு

பணக்காரனும், ஏழையும் சொர்க்க லோகத்தில் இடம் பெற முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் ஏற்றத்தாழ்வு மறைந்து விடும். "பணமிருந்திட்டா அவன் பெரிய மனுஷன். ஒவ்வொருத்தனும் என்ன மாதிரி ஆட்டம் போடுறான். ஆனா செத்துப்போனா அவனையும் மண்ணு தான் தின்னுது ஏழையையும் மண்ணுதான் தின்னுது. இந்த இலட்சணத்திலே ஏழை -பணக்காரன் வித்தியாசம் தேவைதானா?" என்ற கூற்றை கார்லூஸ் என்னும் பாத்திர படைப்பின் வழியாக ஆசிரியர் சமூகத்திற்கு உரைக்கிறார்.

வீண்பழி போடுதல்

சமுதாயத்தில் சில மக்கள் தாம் செய்கின்ற தவறுகளை மறைப்பதற்கு வேறு நபர்களின் மீது வீண் பழிகளைப் போடுகிறார்கள். இதனால் ஒரு தவறும் செய்யாதவர்கள் தண்டிக்கப் படுகிறார்கள். எமோரியன் எஸ்ரோனை கைது செய்ய வேண்டும் என்பதற்காக மக்லோனிடம் வீண்பழி சொற்களைக் கூறுகிறான். கிறித்தவ மதத்தைப் பரப்புகிறான் என்றும் புரட்சி ஒன்று

அமைதியாக நடந்து வருகிறது என்றும் கிறித்தவ ஆலய நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு கொள்கிறான் என்றும் வீண்பழி போடுகிறான். சமுதாயத்தில் பிறரைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒருவர் மீது மற்றொருவர் வீண்பழி இடுகின்ற வழக்கம் காணப்படுகிறது என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

நம்பிக்கைத் துரோகம்

சமுதாயத்தில் சிலர் நல்லவர்கள் போல் காட்சி அளித்து மக்களை ஏமாற்றுகிறார்கள். ஏதாவது ஒரு காரியம் வரும் போது நம்பிக்கைத் துரோகம் செய்கின்றனர். அலெக்சாண்டர் தனது மகளான ஜாக்குலினிடம் நம்பிக்கைத் துரோகம் செய்யுமாறு கூறுகிறான். ஆனால் அவள் எஸ்ரோனுக்கு எதிராக நம்பிக்கைத் துரோகத்தைச் செய்ய மாட்டேன் என்று கூறுகிறாள். இதன் மூலம் சமுதாயத்தில் மக்களுக்கிடையே துரோகம் இழைக்கும் பாங்கு இருப்பதை ஆசிரியர் கூறுகிறார்.

மதப் பாகுபாடு

சில தலைவர்கள் தங்கள் மதத்திற்கே ஆதரவு கொடுக்கின்றனர். சில மத மக்களை ஒடுக்குகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த "அதெனியாவுக்கும் அலெக்சாண்டருக்கும் கிறித்தவர்களைக் கண்டால் பேயைக் கண்ட மாதிரி" என்று கார்லூசு கூறுவதாக அமைகிறது. "அலெக்சாண்டர் கிறித்தவர்களை வெறுப்பவன்" என்ற கூற்றிலிருந்து உணர முடிகிறது. "எல்லா மதமும் ஒன்று தான். வழிபடும் முறைகள் தான் வேறு. அனைவருக்கும் இறைவன் ஒருவரே" எனும் உண்மையையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். மதக் கலவரங்களால் நாட்டில் உள்ள மக்கள் கொலைச் செய்யப்படுகிறார்கள். இதனால் மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

சாதி பாகுபாடு

கடவுள் சாதியைப் படைக்கவில்லை. மனிதர்கள் தொழிலின் அடிப்படையில், அவரவர் சுயநலத்துக்காகச் சாதியைப் படைத்தார்கள். சமுதாயத்தில் மக்கள் அதிகமாகச் சாதிப்பாகுபாடு பார்க்கிறார்கள் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். சாதி வேறுபாடுகளால் ஆணவக், கொலைகள் நடைபெறுகிறது. எத்தனையோ குடும்பங்கள் உறவுகளை இழந்து தவிக்கிறார்கள். "சாதியே இல்லை என்கிற நிலைமை வரணும்." என்று தனது கருத்தினை முன் வைத்துள்ளார்.

முடிவுரை

"வஞ்சக வலை" என்னும் நாடகம் இரு நாடுகளுக்கிடையே உள்ள போட்டி மனப்பான்மையைக் குறிப்பிடுகிறது. பதவி ஆசையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் சுழ்ச்சியையும் அதன் விளைவுகளையும் ஆசிரியர் அழகாகச் சுட்டியுள்ளார். சமுதாயத்தில் காணப்படுகின்ற சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய அறிவுரைகளையும் மக்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

துணை நின்றவை

1. தமிழ் நாடக வரலாறு, சக்திப்பெருமாள், வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1979.
2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள், இராமசாமி எம் முதலியார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
3. கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள், கோவிந்தசாமி பெ, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1992.
4. கன்னியாகுமரி மாவட்ட நாடக வரலாறு, இரணியல் கலைத்தோழன், கலை நிலையம், மாங்குழி, 2000.
5. வஞ்சக வலை, இரணியல் கலைத்தோழன், அச்சிலேறாத நாடகம்.